# ஆண்டவரின் விண்ணேற்பு விழா

# திருவழிபாடு ஆண்டு - C

# 2025-06-01

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 1: 1-11,*

*திருப்பாடல்கள் 47: 1-2. 5-6. 7-8 (பல்லவி: 5*b),

*தூய பவுல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் - 9;24-28 10;19-23,*

*லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 46-53)*

**திருப்பலி முன்னுரை**

*விண்ணகத்துக்குரியவர்களே, ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசு, நாற்பது நாட்கள் தனது சீடர்களை சந்தித்து உறுதிபடுத்திய பின்பு விண்ணேற்றம் அடைந்து தந்தையாம் இறைவனிடம் செல்கிறார். தூய ஆவியாரின் துணையோடு உலகெங்கும் நற்செய்தியை பறைசாற்றி, கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம். முதல் கிறிஸ்தவர்களைப் போன்று, ஆண்டவரின் மாட்சியை பிறருக்கு அறிவிக்க இயேசு நம்மை அழைக்கிறார். ஆண்டவருக்கு சான்று பகரும் வகையில் மனந்திரும்பிய புதுவாழ்வு வாழ, இத்திருப்பலியில் நாம் மன்றாடுவோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*தெளிவின் தேறலே எம் தந்தையே!*

*உம் மகத்துவமான திருமகன் இயேசுவை உயிர்த்தெழச் செய்து அவரது உயிர்ப்பால் பலரைத் தேற்றினீர். எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்களை உம் திருமுன் சமர்ப்பணம் செய்கின்றோம். இவர்களைத் தூய ஆவியால் தேற்றி, உயிர்ப்பில் உன்னத எடுத்துக்காட்டுக்களாய் வாழ வரமருள இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இறைவா!*

*தூய ஆவியின் உடனிருப்பை எமக்குத் தடையின்றித் தாரும். ஊக்கமுடன் உலகின் கடையெல்லைவரை உயிர்த்த இயேசுவின் உரமான சாட்சிகளாக மிளிர்ந்திடத்துணை செய்ய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இறைவா! எம் தந்தையே!*

*இயேசு ஆண்டவர் மீதான எம் நம்பிக்கையை இன்னும் உறுதிப்படுத்தும். நேரிய உள்ளத்தோடு, பிழையறா மாண்புடன் எம்மவரை, எமது உயிரானவரை நாங்கள் அணுகி வர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இறைவா!*

*வாழ்வினில் விரக்தி, இயலாமை, ஏற்றத்தாழ்வுகளால் அல்லலுறும் மானிடத்தை உம்பால் சமர்ப்பிக்கிறோம். இவர்களில் சமநிலையை, சாயாத்தன்மையை நிலைபெறச் செய்து இயேசுவோடு இன்புற்று வாழ வரமருள இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இறைவா!*

*எமதாண்டவர் வாக்களித்திட்ட துணையாளரை எம்மில் நிறைவாகப் பொழிந்தருளும், அவரால் ஆக்கமும் ஊக்கமும் பெற்று, பெருமகிழ்வுடன் உம் திருமகன்! வழியாக உம்மைப் போற்றிப் புகழ இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*வாழ்வின் துணையாம் இறைவா,*

*நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

மேன்மைமிகு அரசராம் இறைவா,

பிற சமயத்தினரின் அவமதிப்புகளை பொருட்படுத்தாமல், உலகெங்கும் வாழும் மக்களுக்கு உம் திருமகனது உயிர்ப்பின் நற்செய்தியைக் கொண்டு சேர்க்கும் கருவிகளாக கிறிஸ்தவர்கள் அனைவரையும் உருமாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.